## <u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>

## <u>MCOP. No.137/2018</u>

2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ம் நாள் செவ்வாய்கிழமை ம.சா.1

சாட்சியின் சாட்சியம் திரு.V.ஜான்மினோ,B.A.,B.L., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனோகரன் | தொழில் | : | |
| த/பெ | : | பொன்னுசாமி (எ) | கிராமம் | : | |
| வயது | : | | தாலுகா | : | |
| ஜாதி | : | | மாவட்டம் | : | |
| சமயம் | : | | | | |

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் 3ம் மனுதாரர். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன். பிரமாண வாக்குமூலம் ஆவணப்பட்டியலில் உள்ள ஆவணங்களை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.16 வரை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை உண்மைச்சான்று நகல் ம.சா.ஆ.1, பொன்னுசாமி (எ) பொன்னுசாமி நம்பியாரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.2, பொன்னுசாமி (எ) பொன்னுசாமி நம்பியாரின் வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.3, கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையிலிருந்து பொன்னுசாமி (எ) பொன்னுசாமி நம்பியார் சிகிச்சை பெற்று வெளியேறிய வெளியேற்று குறிப்புகள் எண்ணிக்கை 2 ம.சா.ஆ.4, மருத்துவ செலவு குறித்த பில்கள் ம.சா.ஆ.5, மனுதாரரின் C.T Scan Report ம.சா.ஆ.6, மனுதாரரின் Cardiology Report ம.சா.ஆ.6, மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் குறித்த ஊடுகதிர் படம் எண்ணிக்கை 3 ம.சா.ஆ.8, மனுதாரர் வாகனத்திற்குரிய விபத்து பதிவேட்டு அறிக்கை (AIR Form) உண்மை நகல் ம.சா.ஆ.10, காயச்சான்று உண்மை நகல் ம.சா.ஆ.11, காவல் நிலைய குற்ற இறுதி அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.12, மனுதாரர்களின் குடும்ப அட்டை நகல் ம.சா.ஆ.13, 1ம் மனுதாரரின் வாக்காளர் அடையாள அட்டை ம.சா.ஆ.14, 2ம் மனுதாரரின் வாக்காளர் அடையாள அட்டை ம.சா.ஆ.15, 3ம் மனுதாரரின் ஆதார் அட்டை ம.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒம் /திரு.வி.ஜான்மினோ, பி.ஏ.,பி.எல்/
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.